Registered as a Newspaper

நாடாளுமன்றத் தேர்தல் -2024
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
அறிவு
ஆற்றல்
ஆளுமை
X 3
சட்டத்தரணி
கேசவன் சயந்தன்

# உதயன்

X 1
அங்கஜன் இராமநாதன்

சுடர் : 39
கதிர் : 344
செவ்வாய்க்கிழமை
05 நவம்பர் 2024
ஐப்பசி 19
வள்ளுவர் ஆண்டு 2055
பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

மாற்றத்துக்கு
மாம்பழம்
X 2
சுயேச்சைக்குழு 14

வடக்கிலிருந்து

# இராணுவ முகாம்களை உடன் அகற்றமுடியாது

**கொழும்பு, நவம்பர் 5**

பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீடுகளை மேற்கொள்ளாமல் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கேணல் நளின் ஹேரத் தெரிவித்துள்ளார்.

10

## போதைப்பொருள்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி!

### கிளிநொச்சியில் வைத்து பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.5

இலங்கையில் நிலவும் போதைப்பொருள் கலாசாரத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைப்போம் என்று பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

10

## நவம்பர் 14ஆம் திகதி பொதுத்தேர்தல் உறுதி

### தேர்தல் திகதிக்கு எதிரான மனு நீதிமன்றால் தள்ளுபடி

கொழும்பு, நவ. 5

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறும் என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

16

## ஊழல் மோசடியாளருக்கு என்னைக் கண்டு அச்சம்

### இரேனியஸ் செல்வின் தெரிவிப்பு


விரிவு :- பக். 10

யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி மாவட்ட
மக்கள் வளம்பெற
1,056 மில்லியன்
ரூபாவுக்கும்
அதிகமான
திட்டங்களைப்
பெற்றுத்தந்த
செயல்வீரருக்கே
உங்கள் வாக்கு!
உதயன்
சரவணபவன்

றைனோ
சீலிங் ஷீட்
மரவேலைப்பாட்டுத் தோற்றத்துடன்
விரும்பிய நிறத்தை பூசக்கூடிய Design சீலிங் ஷீட்.
நீண்ட பாவனை | குறைந்த செலவு | 60 வருட நம்பிக்கை
RHINO
60 YEARS
www.rhino.lk
I Know Rhino
ரூ. 1,690/- இலிருந்து
துரித அழைப்பு 0115 748 728
இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












## துயிலுமில்லத்தில் சிரமதானப் பணி

மன்னார், நவ.5

மாந்தை மேற்குப் பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணிகள் மாவீரர் துயிலும் இல்ல குழுவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இதன் போது மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர் தூவி,சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-ரி-25-56)


சத்துணவு வழங்கல்

சாவகச்சேரி, நவ.5

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் பன்னாட்டு வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சத்துணவு வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சரசாலை வடக்கு முன்பள்ளியில் நடைபெற்றது. மட்டுவில் நுணாவிலைச் சேர்ந்த ர.சுகந்தினி எனும் நன்கொடையாளரின் நிதிப் பங்களிப்பில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், முன்பள்ளி குழுத்தலைவர், சமுர்த்தி முகாமையாளர்கள், சிறுவர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பராட்டே' சட்டத்தின் காரணமாக 127 பேர் கடந்தாண்டு தற்கொலை

கொழும்பு, நவ.5
இலங்கையில் உள்ள வங்கிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'பராட்டே சட்டம்' காரணமாக கடந்த வருடத்தின் தொடக்கத்தில் 127 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று மாவட்ட ஒன்றிணைந்த தொழில் முயற்சியாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.


கடன் பெறுநர்களால் மீள செலுத்தாமல் தவறவிடப்பட்ட கடன்களை அறவிடும் வகையில் அந்தக் கடனுக்கு பிணைப் பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு வங்கிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டமே 'பராட்டே' சட்டமாகும்.

இந்தச் சட்டத்தால் இலங்கையிலுள்ள கிட்டத்தட்ட நான்கு இலட்சம் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் ஏற்கனவே அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று மாவட்ட ஒன்றிணைந்த தொழில் முயற்சியாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் சம்லி குமாரசிங்க தெரிவித்துள்ளதாவது

வியாபார இடங்கள் முதல் வசிப்பிடங்களை கூட இழந்த பலர் ஏற்கனவே மிகவும் அசௌகரியமான நிலையில் உள்ளனர். கடந்த அரசாங்கத்தை பற்றிப் பேசினால், நிவாரணம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பராட்டே சட்டத்தின் கீழ் சொத்துகளை ஏலம் எடுத்த எம்மில் கிட்டத்தட்ட 127 பேர் கடந்த ஆண்டு தொடக்கத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். பராட்டே சட்டத்தின் கீழ் சொத்துகள் ஏலம் விடப்பட்ட அனைவருக்கும் வங்கிகளில் இருந்து நிவாரணம் கிடைக்கவில்லை. எங்களுக்கு வழங்கப்பட்டது நிவாரண காலம் மாத்திரம் தான். அதுவும் உண்மையில் ஒரு வட்டி பொறி. தற்போதைய அரசாங்கத்துடன் சில கலந்துரையாடல்களை நடத்தினோம். பராட்டே சட்டம் டிசம்பர் 15 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அது நடைமுறைக்கு வரும். அப்போது 127 தற்கொலைகள் இருநூறு முந்நூறாக அதிகரிக்கும். பராட்டே சட்டம் இடைநிறுத்தப்பட்டாலும், உடனடியாக தொழில்முனைவோருக்கு முன்னேற எந்த வழியும் இல்லை. தொழில்முனைவோருக்கு உதவும் வகையில் நாட்டில் வணிகத்தை உருவாக்கும் திட்டம் எதுவும் இல்லை-என்றார். (எ-இ)

## வாழைப்பழங்கள் திடீர் விலைச்சரிவு



யாழ். குடாநாட்டில் வாழைப்பழங்களின் விலை திடீரென வீழ்ச்சியடைந்ததை அடுத்து அவற்றை சந்தைப்படுத்த முடியாது செய்கையாளர்கள் சிரமப்பட்டுவருகின்றனர்.

கதலி, இதரை போன்ற பழங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. அவற்றைச் சந்தைப்படுத்த முடியாத வாழைக்குலைகளை விவசாயிகள் தமது கால்நடைகளுக்கு தீவினமாக பயன்படுத்தி வருகின்றனர். கிலோ 150 ரூபாவாக விற்கப்பட்டுவந்த கதலிப்பழம் தற்போது கிலோ 60 ரூபாவாக சரிந்துள்ளது. நீர்வேலி, திருநெல்வேலி, மருதனார்மடம் போன்ற பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு அதிகளவான வாழைக்குலைகள் கொண்டுவரப்படுவதால் அவை விற்பனையின்றி தேங்குவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-25-17)

## லொஹான் ரத்வத்தையின் மனைவிக்கு மறியல்

கொழும்பு, நவ.5
முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையின் மனைவி மிரிஹானவில் உள்ள அவரது வீட்டில் பதிவு செய்யப்படாத சொகுசு வாகனம் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நவம்பர் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நுகேகொட நீதிவான் ருவினி ஜயவர்த்தனவால் அவர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)

## சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ். நவ. 5
கடந்த ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, கடந்த ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி உயிரிழந்த தர்மலிங்கம் வசந்தராஜன் (வயது-60) என்பவரது உடலை பதின்நான்கு நாள்களுக்குள் அடையாளம் காட்டி உரியவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-45)

## கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், நவ.5
கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு வண்ணார் பண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சண்முக அர்சனையும், மறுநாள் வெள்ளிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,17)

## மிதிகம துப்பாக்கிச்சூடு 8 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, நவ.5
மிதிகம, கோவியப்பன பிரதேசத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் உட்பட எட்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் அஹங்கம மற்றும் மிதிகம பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்திய துப்பாக்கிதாரிகள், துப்பாக்கி தோட்டாக்களை வழங்கிய ஒருவர் மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய ஐந்து ஆண்கள் மற்றும் ஒரு பெண் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து ஆயுதம் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பிரதான சந்தேகநபரிடமிருந்து போதைப்பொருள் விற்பனையில் கிடைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் 15 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## விநாயகர் சதுர்த்தி

யாழ்ப்பாணம், நவ.5
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை சதுர்த்தி உற்சவம் இடம்பெறவுள்ளது.

பி.ப 4 மணிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று விநாயகப்பெருமான் வீதிவலம் வருவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளில் கூட மிகுந்த கவனம் தேவைப்படும். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டாலும் பொறுமை காப்பது அவசியம். பிள்ளைகள் வகையில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். முக்கியமான முடிவு எடுப்பதற்குச் சாதகமான நாள். செலவுகளுக்குத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை இருக்காது. உறவினர்கள் சிலர் உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அரவணைத்துச் செல்லவும். உணவு வகையால் அலர்ஜி ஏற்பட வாய்ப்பு உள்ளதால், வெளி இடங்களில் உண்பதைத் தவிர்க்கவும்.

**சிம்மம் :** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் பேசும்போது பதற்றம் கொள்ளாமல் இருப்பது அவசியம்

**கன்னி:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். இளைய சகோதர வகையில் அனுகூலம் உண்டாகும்.

**துலாம்:** கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் பணிச் சுமை சற்று அதிகமாகத்தான் இருக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம்.

**விருச்சிகம் :** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.


**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தாயின் தேவையறிந்து அவருக்கு உதவுவீர்கள். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்பு கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.

**மகரம்:** உற்சாகமான நாள். கணவன்மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**கும்பம்:** தேவையான பணம் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கு வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னாரில் பிரதமர்

மன்னார், நவ.5

பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். பிரதமரின் வருகையை ஒட்டி மன்னார் நகரப் பகுதியில் பலத்த பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன. மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற மக்கள் கடுமையான உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (எ-56)




## குடமுழுக்கு

யாழ். நவ.5

காரைநகர் அல்லின் வீதி காமாட்சி கேணி ஸ்ரீ வைரவர் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.01 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-ரி)

# ரூ.1,450,000 மோசடி; சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 5

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி 14 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, சாவகச்சேரியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் அரசியல் கட்சியொன்றின் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண் செலவுகளைக் குறைப்பது அரசியல் பழிவாங்கல் அல்ல!

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, நவ.5

அரசியல்வாதிகளுக்குரிய வீண் செலவீனங்களைக் குறைக்கும் கொள்கையை கீழ்மட்டம் முதல் மேல்மட்டம் வரை செயற்படுத்திவருகின்றோம். இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதியதொரு அரசியல் கலாசாரப் பாதையில் நாம் பயணிக்கவேண்டியுள்ளது. அதற்கு நிறைவேற்று அதிகாரம் மட்டும் பலமாக இருந்தால் போதாது, அமைச்சரவை, நாடாளுமன்றமும் பலமானதாக இருக்க வேண்டும். எனவே, புதிய நாடாளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களால் நிரப்புங்கள். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை நோக்கி செல்லமுடியும்.

புதிய ஆட்சியில் 25 பேர்கொண்ட அமைச்சரவையே நியமிக்கப்படும். அதற்கு இணையாக பிரதி அமைச்சுகள் உருவாக்கப்படும். தற்போதைய நாடாளுமன்றத்தை தூய்மைப்படுத்தும் சிரமதானப் பணியை நவம்பர் 14 ஆம் திகதி முன்னெடுப்பதற்கு தயாராகுங்கள். ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அரசியல்வாதிகளின் வீண் செலவுகள் குறைக்கப்பட்டு, மக்கள் பணம் சேமிக்கப்படும். இது கொள்கை ரீதியிலான முடிவு. முன்னாள் ஜனாதிபதிகளை பழிவாங்கும் நடவடிக்கை அல்ல. வீடுகளை வழங்க நேரிடும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சமைப்பதற்கு சமையல்காரர்கள் வழங்கப்படமாட்டார்கள், தேவைக்கு அதிகமான வாகனங்கள் வழங்கப்படாது-என்றார். (எ-44)

# தமிழ்த் தேசியத்தைக் காப்பதற்கு மாம்பழச் சின்னத்தை ஆதரிப்பீர்!

ஈ.சரவணபவன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், நவ.5

தமிழரசுக் கட்சியால் சிதைக்கப்பட்ட தமிழ்த் தேசியத்தை மாம்பழம் சின்னத்தில் களமிறங்கும் சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு மீள உருவாக்கும் என்று தெரிவித்துள்ளார் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஈ.சரவணபவன். சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாங்கள் தமிழரசுக் கட்சியிலிருந்து ஏன் விலகினோம் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதை இங்கு கூற நான் விரும்பவில்லை. தற்போது நாங்கள் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றோம். மக்கள் எமக்கு அமோக ஆதரவை வழங்குகின்றனர். நான் சார்ந்த ஊடக நிறுவனத்தின் மீது இதுவரையில் 38 தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியத்துக்காகப் பயணிப்பவர்களுக்குப் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்படும். நானும், என் சார்ந்த நிறுவனமும் பல தடவைகள் தாக்கப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் தமிழ்த் தேசியத்துக்கான எனது பயணத்தை மாற்றிக்கொள்ளவில்லை. தமிழ்த் தேசியத்தை விலைபேசி விற்பதற்குப் பல தரப்புகள் கங்கணம் கட்டி நிற்கின்றன. தமிழ் மக்கள் அவதானமாகச் செயற்பட்டு தமிழ்த் தேசியத்தை உண்மையாக நேசிப்பவர்களை, அதற்காகப் போராடுபவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து சுமார் 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டேன். ஏனைய தொகுதிகளுக்கும் என்னால் இயன்றவரையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றேன். நாங்கள் தமிழ்த் தேசியத்தை விலைபேசி விற்றவர்கள் அல்லர் என்பது மக்களுக்கு நன்கு தெரியும். தமிழ் மக்கள் இந்த மாவீரர் மாதத்தில் தமது வரலாற்றுக் கடமைகளில் ஒன்றாக தமிழ்த் தேசியம் சார்ந்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் - என்றார். (எ-27)

# எல்லாளன் சமாதியை வணங்கிப் பரப்புரை



யாழ்ப்பாணம், நவ.5

சுயேச்சைக் குழு-21 ஆக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை கடந்த சனிக்கிழமை அநுராதபுரத்தில் உள்ள எல்லாளன் சமாதியை வணங்கியபின்னர் தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்துள்ளனர். அநுராதபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் தரிசனத்தில் ஈடுபட்ட பின்னர், அங்குள்ள சில தமிழ்ப் பொது அமைப்புகளுடன் சமகால அரசியல், சமூக நிலைவரங்கள் தொடர்பாக கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (எ-18)



# பரப்புரை அலுவலகம் திறப்பு

மன்னார், நவ.5

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் அ.கலிஸ்ரா டலிமா தனது தேர்தல் பரப்புரை அலுவலகத்தைக் கடந்த சனிக்கிழமை தலைமன்னார், ஊர்மனைக் கிராமத்தில் திறந்தார். இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (எ-56)



# வவுனியாவில் முன்னணியின் பரப்புரைக் கூட்டம்

வவுனியா, நவ.5

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. முன்னணியின் வன்னி மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கட்சியின் தலைவர் கயேந்திரகுமார் பொன்னம்பலம், கலந்துகொண்டார். (எ-110)

# வெளிநாட்டுத் தூதரக சேவை முழுமையாக மறுசீரமைப்பு

கொழும்பு, நவ.5

வெளிநாட்டுத் தூதரக சேவை முழுமையாக மறுசீரமைக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த ஆட்சி மூன்று மாதங்களில் கவிழாது. நாட்டை மீட்டுவிட்டே திரும்பிப் பார்ப்போம். வெளிநாட்டுத் தூதரக சேவை முழுமையாக மறுசீரமைக்கப்படும். அரசியல்வாதிகளே தூதரக சேவைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் மீள அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தூதுவர்கள் மட்டும் அல்ல இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உள்ளவர்களும் அழைக்கப்படுவார்கள்.

ஏனெனில் அரசியல்வாதிகளின் சகாக்கள்தான் பலர் உள்ளனர். நாட்டுக்கு முதலீடுகளை கொண்டுவரக்கூடிய நாட்டுக்குச் சேவை செய்யக்கூடியவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரபுத்துவ அரசியலுக்கு முடிவுகட்டப்பட்டுள்ளது. அதனால்தான் சிலர் மூன்று மாதங்களில், மூன்று வாரங்களில்எல்லாம்ஆட்சிகவிழும்எனக்கூறிக்கொண்டுள்ளனர். அவர்கள் கூறுவது பற்றி நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை-என்றார். (எ-44)

# ஜனநாயக ஐக்கியமுன்னணி தேசியக்கூட்டணிக்கு ஆதரவு!

வவுனியா, நவ.5

நாடாளுமன்றத்தேர்தலில் ப.உதயராசாவை முதன்மை வேட்பாளராகக் கொண்ட ஜனநாயக தேசியக் கூட்டணிக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்று வன்னி மாவட்டத்தில் போட்டியிடவிருந்த ஜனநாயக ஐக்கிய முன்னணிக் கட்சியின் முக்கியஸ்தரான ஜாவித் தெரிவித்துள்ளார். நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தோம். வாக்குகள் சிதறடிக்கக்கூடாது என்பதற்காக, வெல்லக்கூடியவேட்பாளர் ஒருவருக்கு எமது ஆதரவைவழங்கத்தீர்மானித்துள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-25-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வடக்கு மீனவர் பிரச்சினை நிரந்தரத் தீர்வே வேண்டும்

## இந்தியாவிடம் ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, நவ. 5

வடமாகாண கடல் பிரதேசத்தில் நிலவும் மீன்பிடிப் பிரச்சினைகள் தொடர்பில் மீனவ சமூகத்தின் நலன்களை பாதுகாப்பதில் தான் எப்போதும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வக்கும், இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஸ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இருநாட்டு மீனவ சமூகங்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்புத் திட்டத்தின் மூலம் நீண்ட கால தீர்வை எட்டுவதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடப்பட்டது. மேலும் இலங்கையில் மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையின் மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார் (ச-இ)



## தீபாவளி நிகழ்வு

யாழ்.போதனா மருத்துவமனையின் தீபாவளிக் கொண்டாட்டம் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-45-66)



# தமிழ் மக்கள் மத்தியில் எம்மைப்பற்றி சேறுபூசல்

## மக்கள் நம்பக்கூடாது என்று ரில்வின் சில்வா கோரிக்கை

கொழும்பு, நவ. 5

தமிழ் மக்கள் மத்தியில் எம்மைப்பற்றி தவறான தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. எனவே மக்கள் அந்தத் தகவல்களை நம்பக்கூடாது என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்து இன மக்களினதும் இன, மத, மொழி மற்றும் கலாசார உரிமைகளை நாம் ஏற்கின்றோம். நல்லிணக்கமே எமது பிரதான இலக்கு. அப்படி இருந்தும் வடக்குத்

தமிழ் மக்கள் மத்தியில் எம்மை பற்றிய கட்டுக்கதைகள் பரப்பப்படுகின்றன. இதனை மக்கள் நம்பக்கூடாது. தேசிய மக்கள் சக்திக்கு எதிராக சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தவறான விம்பம் தோற்றுவிக்கப்படுகின்றது. கடந்தகால திரிவுபடுத்தப்பட்ட கதைகள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டுவருகின்றன.

அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள சில கட்சிகளுக்கு கொள்கை ரீதியில் எம்முடன் மோதமுடியாது. இதனால்தான் கட்டுக்கதைகள் பரப்பப்படுகின்றன. எனவே, வதந்திகளை மக்கள் நம்பக்கூடாது. இன மற்றும் மத ரீதியில் நாம் அநீதிகளை இழக்கமாட்டோம். அனைத்து இன மக்களினதும் இன, மத, மொழி, கலாசார உரிமைகளை ஏற்று மதிக்கின்றோம். இன, மத, மொழி பேதமற்ற இலங்கையைக் கட்டியெழுப்புவதே எமது இலக்காகும் - என்றார். (அ-ம-44)

## டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 5

நீர்வேலி பிரதேசத்தில் இடம்பெற்ற விசேட டெங்கு சோதனையின் போது 347 வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஜே/ 268 கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்ற இக்கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது சுகாதார வசதியின்றிக் காணப்பட்ட 9 குடியிருப்புகளுக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோடு, 14 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டன. (ச-45-17)

# பாசிக்குடாவுக்கும் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, நவ.5

அறுகம்பே சுற்றுலாத் தலத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைத் தொடர்ந்து பாசிக்குடா கடற்கரைக்கும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாசிக்குடா கடற்கரை இலங்கையின் புகழ்பெற்றதும் உலகின் மிகச்சிறந்த சுற்றுலாத்தலங்களின் ஒன்றாகவும் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அனுபவமற்றவர்களிடம் ஒப்படைத்தால் கொத்தலாவல பஸ் நிலையே நாட்டுக்கும்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ.5

அனுபவம் இல்லாதவர்களை நாடாளுமன்றம் அனுப்பினால், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக பஸ்ஸுக்கு நடந்ததுபோல்தான் நாட்டுக்கு நடக்கக்கூடும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததுபோதும், எவரேனும் பதவி விலகி வாய்ப்பளித்தால்கூட வரப்போவதில்லை. எனினும், அனுபவம் உள்ளவர்களே நாடாளுமன்றம் வரவேண்டும். ஆளுங்கட்சியில் உள்ளவர்களுக்கு அனுபவம் இல்லை. தேசிய பொருளாதாரப்பகுதிக்குள் நாட்டை மீட்க அனுபவம் எம்மிடமே உள்ளது.

அனுபவம் இல்லாதவர்களிடம் எதிர்காலத்தை ஒப்படைப்பது ஆபத்தானது, பஸ் செலுத்துவதற்குக்கூட சாரதிக்கு லைசென்ஸ் வேண்டும். அனுபவம் இல்லாதவர்களிடம் வழங்கினால் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலை பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையே நாட்டுக்கும் நடக்கக்கூடும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்ப பயங்கரவாதச்சட்டத்தை நீக்குக

## சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து கோரிக்கை

**கொழும்பு, நவ.5**

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பான தமது வாக்குறுதியை அர்ப்பணிப்பை மதிக்கவேண்டும் என்று சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கான முயற்சிகள் தொடர்பாக சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து கரிசனை வெளியிட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் தக்கவைக்கப்படும் எனச் சுட்டிக்காட்டும் வகையிலான அறிக்கைகள் தொடர்பாக ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆயுதமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பொதுமக்களுக்கு எதிராகத் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள நிலையில் பயன்படுத்தப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற வேண்டுகோள் நாட்டுக்குள் இருந்தும், சர்வதேச சமூகத்திலிருந்தும் வெளியாகியிருக்கின்றது. நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான ஆணையை வழங்கிய பின்னர் தேசிய மக்கள் சக்தியின் சமீபத்தைய அறிக்கைகள் மக்களின் ஆணையை குறைமதிப்பிடும் வகையில் அமைந்துள்ளன. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பான தமது உறுதிமொழியை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிறைவேற்றவேண்டும் என்று சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

# தீர்வு வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை

## ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை

தங்களது பிரச்சினைக்கான தீர்வு கிடைக்காவிட்டால் இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அறிவித்துள்ளது. ஆள்சேர்ப்பு, பதவி உயர்வு, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அண்மையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்திருந்தபோதும், காலம்தாழ்த்தும் நிலை காணப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் தெரிவித்துள்ளது. (எ-இ)

# விமான சேவைகள் அதிகார சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு, நவ.5

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் புதிய தலைவராக, மேலதிக பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றிய சுனில் ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். கட்டுநாயக்கவில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நேற்று அவர் தமது கடமைகளை பொறுப்பேற்றார். இவர் இலங்கை சுங்கத் திணைக்களத்தில் 37 வருடங்கள் பணியாற்றியதோடு அதன் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியுள்ளார்என்பது குறிப்பிடத்தக்கது (எ-இ)

# போலி நாணயத்தாளுடன் ஒருவர் கைது



கொழும்பு, நவ.5

போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மினுவாங்கொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் சந்தேகநபரிடம் இருந்து போலி 5 ஆயிரம் ரூபா தாள்கள் 25 மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் போலி கொரிய நாணயத்தாள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



# மாலை வேளையில் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, நவ.5

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான வளிமண்டலச் சூழல் சாதகமாகக் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில், காலை வேளையில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (எ-இ)

# சுகாதார அமைச்சுச் செயலாளரின் பெயரைப் பயன்படுத்தி மோசடி!

சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபாலவின் பெயரைப் பயன்படுத்தி மோசடிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளரின் பெயரைப் பயன்படுத்தி சிலர் மோசடியான முறையில் பணம் திரட்டுகின்றனர். அதிகாரபூர்வமான முறையில் இவ்வாறு பணம் திரட்டப்படவில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இவ்வாறான செயல்களை நம்பி நன்கொடைகளை வழங்கவேண்டாம், நன்கொடை கோரப்பட்டால் அது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தினம் தெரியுமோ?

கொழும்பில இருந்து யாழ்ப்பாணம் லைன் ஓடுற சில தனியார் பஸ்காரருக்கு தாங்கள் தனிக்காட்டுராசாக்கள் எண்டு நினைப்பு. பஸ்ஸில ஏத்துமட்டும் 'அம்மா, அக்கா, அண்ணா, தம்பி, ஐயா' எண்டு கெஞ்சிக் கும்பிட்டுக் கூத் தாடி ஏத்துவினம். ஆனால் பஸ் வெளிக்கிட்ட பிறகு அவையின்ர தோரணையே மாறிப்போடும். அவை இரு எண்டா இருக்கோணும், இறங்கு எண்டா இறங்கோணும். அவைக்கு எப்ப பசிக்குதோ அப்பதான் பஸ்ஸில வாறவையும் சாப்பிடவேணும். அதுகும் தங்களுக்கு 'வரும்படி' உள்ள கடையில தான் நிப்பாட்டுவினம். இதைக் கூட பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் இதுகளை யெல்லாம் தாண்டி கிட்டடியில 'ரத்தினமான' ஒரு பிரைவேட் பஸ்ஸொண்டு செய்த வேலையை ஒருத்த ராலையும் பொறுக்கேலாது.

கொஞ்சநாளைக்கு முதல் இரவு, கொழும்பில இருந்து அந்த பஸ் யாழ்ப்பாணத்துக்கு வெளிக்கிட்டது. வந்தவையில சிலர் பஸ்ஸில ஏறேக்க காசு குடுத்தவை, சிலர் ஒன்லைன்ல புக் பண்ணி காசு கட்டிட்டு வந்தவை. அரைவாசித் தூரம்வரைக்கும் பஸ் ஒழுங்காத்தான் வந்து கொண்டிருந்தது. ஆனால் புத்தளம் வரமுதலே, ஏதோ 'கடபுடா' எண்டு பஸ்ஸில சத்தம். பிறகு பார்த்தால் ஒரு இரும்புப்பட்டம் மேல்பக்கத்தில இருந்து பயணி ஒராளுக்குப் பக்கத்தில விழுந்திருக்கு.

'அண்ணை என்னவோ இரும்பெல்லாம் கழண்டு விழுகுதே?' எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு 'அது ஏசியின்ர. ஏசியில ஒரு சின்னப் பழுது வேறை ஒண்டுமில்லை' எண்டு பஸ்காரர் சமாளிச்சிருக்கினம். ஆனால் பேய்ப் படங்களில வாற மாதிரி அதுக்குப் பிறகும் ஏதேதோ சின்னச் சின்ன இரும்புகள் மேல இருந்து விழத்தொடங்கிட்டு. அதோட பஸ்ஸின்ர லைற்றுகளும் ஒவ்வொண்டா நிண்டு, கடைசியா ஹெட் லைட்டும் அடிச்சிட்டுது. லைட்டே இல்லாமல் அந்த பஸ்ஸில யாழ்ப்பாணம் வாற அளவுக்கு ஆருக்குத் துணிச்சல் இருக்கும்? எல்லாரும் பஸ்ஸை நிப்பாட்டி தங்களை வேற பஸ்ஸில ஏத்தச் சொல்லி இருக்கினம். 'இதெல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை. மற்ற வாகனங்களின்ர வெளிச்சம் இருக்குத்தானே, அதைவைச்சே நாங்கள் யாழ்ப்பாணம் போடலாம். இப்பிடி கனதரம் போயிருக்கிறம்' எண்டு பஸ்காரர் சொல்லியிருக்கினம். ஆனால் பயணியள் அதை நம்பி, ரிஸ்க் எடுக்கத் தயாராயில்லை. ஒருமாதிரி பெரும் வாக்குவாதத்துக்குப் பிறகு அவையளை வேற பஸ்ஸில போகச் சொல்லி இருக்கினம். எண்டாலும் பஸ்ஸில காசு குடுத்து ஏறின ஆக்களுக்குத்தான் காசைத் தருவம், ஒன்லைனில புக் பண்ணினவைக்கு தரமுடியாது எண்டு சொல்லிட்டினம். அதில ஒரு குடும்பத்து ஆக்கள் ஒன்லைன்லதான் புக் பண்ணி வந்தவை. அவையளுக்கு வேற பஸ்ஸில போறதெண்டால் பதினாறாயிரம் ரூபா வேணும். ஆனால் அவையிட்ட அவ்வளவு காசு அப்போதைக்கு கையில இல்லை. அதையும் அவை சொல்லிப் பார்த்தினம். ஆனால் பஸ்காரர் குடுக்கவேயில்லை. அந்த நடுச்சாமத்தில நடுறோட்டில பிள்ளையளோட அவை நிக்கேலாது தானே. பஸ்ஸில கூட வந்தவைதான் பாவம் பார்த்து தங்களிட்ட இருந்த காசைக் குடுத்து வேற பஸ்ஸை மறிச்சு ஏறி, அவையையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கினம்.

பஸ் பிழையால பயணியளை இப்பிடி இடைவழியில இறக்கி விடுறதே பெரும் குற்றம். அந்த பஸ் கொம்பனி இன்னொரு பஸ்ஸை தாங்களே ஏற்பாடு பண்ணிக் குடுத்திருக்கவேணும். அதுவும் செய்யாமல் ஒன்லைன் புக்கிங் எண்டிட்டு வாங்கின காசைக் குடுக்காமல் ஏமாத்திறதெல்லாம் மனச்சாட்சியே இல்லாத வேலை. இதையெல்லாம் ஆரிட்டப் போய் சொல்லியழுகிறது?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாற்றம் என்பது நமக்கில்லையா?

உரிய மதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகள் இல்லாமல் வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படாது என்று அறிவித்திருக்கின்றது ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம். பலாலியில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த வீதியொன்றின் ஒரு பகுதி சில நாள்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த விடுவிப்பு, வடமாகாணத்தில் அடுத்தடுத்து நடைபெறவுள்ள காணி விடுவிப்பு மற்றும் படைக்குறைப்புகளுக்கு ஆரம்பப் புள்ளியாக அமையுமா? என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்த நிலையில்தான், எடுத்தஎடுப்பில் இராணுவ முகாம்கள் அகற்றப்படாது என்று ஒரே போடாகப் போட்டிருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

2009 ஆம் ஆண்டுவரை அதாவது விடுதலைப் புலிகளின் கரங்களில் ஆயுதங்கள் இருந்தவரை வடக்கில் படைமுகாம்கள் தேவைப்பட்டனதான். அதை மறுப்பதற்கில்லை. ஆனால், போர் முடிவுக்கு வந்து இன்று ஒன்றரைத் தசாப்தங்கள் கடந்த பின்னரும், எதற்காக இராணுவ முகாம்கள் அப்படியே பேணப்படுகின்றன? இதற்கு அவசியம் என்ன? என்ற கேள்விகள் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில்தான் இராணுவ முகாம்கள் அகற்றப்படுவதற்கு, உரிய மதிப்பீடுகளின் அவசியம் தொடர்பில் அரசாங்கம் கருத்துரைத்திருக்கின்றது.

இராணுவ முகாம்களை அகற்றும் விடயத்தில் மட்டுமல்ல, காணாமற்போனோர் விவகாரமாக இருக்கட்டும், பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கமாக இருக்கட்டும், போர்க்குற்றங்களுக்கு எதிரான விசாரணையாக இருக்கட்டும், தமிழர்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் எவற்றிலெல்லாம் பொதிந்திருக்கின்றதோ அவற்றைத் தகர்த்தெறிவதைத்தான் அநுர அரசாங்கம் ஆட்சியில் ஏறிய நாள்முதல் அரங்கேற்றி வருகின்றது. எனவே, ஜனாதிபதி அநுரவின் தேர்தல் பரப்புரையில் தவிர்க்கமுடியாத இடம் பிடித்திருந்த மாற்றம் என்பது தென்னிலங்கை மக்களுக்கு மட்டுமானதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது.

வாக்குகளைத் தக்கவைக்கும் அரசியல்தான் இந்த நாட்டின் பெரும் சாபக்கேடு. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன என இதுவரை ஆட்சியில் இருந்த அத்தனை கட்சிகளும் வாக்குகளை இலக்குவைத்தே தத்தமது நாள்களை நகர்த்திக் கொண்டிருந்தன. ஆதலால், ஜனாதிபதி அநுரவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் 'சிங்களப் பேரினவாத' வாக்குகளை மையப்படுத்தி தமிழர்நலன்களைபுறமொதுக்கிவிடப்போகின்றதா? என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கின்றது.

இலங்கையின் பொருளாதாரம் பெருநெருக்கடியில் வீழ்ந்துள்ளமைக்கு, தமிழர்களை வஞ்சித்த பேரினவாதச் சித்தாந்தமும் பிரதான காரணம். 'அரகலய' காலத்தில் சிங்களத் தலைவர்கள் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் இது. ஆதலால், மாற்றம் என்ற எண்ணக்கருவை ஜனாதிபதி அநுர ஆத்மார்த்தமாக நடைமுறைப்படுத்துவாராயின் அத்தனை சிக்கல்களுக்குமான விடிவெள்ளியாக அவர் மாறுவதற்கு வாய்ப்புகள் அதிகம். இல்லையேல் அநுரவின் வானமும் அஸ்தமிப்பது நிச்சயம்.



# வெள்ளை மாளிகையின் அதிகாரம் யார் வசம்?

## அமெரிக்காவில் இன்று ஜனாதிபதித் தேர்தல்!

வொஷிங்டன், நவ. 5

அமெரிக்க அதிபர் தேர்தல் இன்று இடம் பெறவுள்ளது.

குடியரசுக் கட்சியின் வேட்பாளரும் முன்னாள் அதிபருமான ட்ரம்ப் மற்றும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரும் தற்போதைய துறை அதிபருமான கமலா ஹரிஸ் இருவரில் யார் அமெரிக்காவின் அதிபராகப் போகின்றனர்? என்பதில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முதல்நாளான நேற்று வெளியான கருத்துக் கணிப்பில் ட்ரம்பை விடவும், கமலா ஹரிஸ் ஒரு வீத வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ட்ரம்புக்குரிய வாய்ப்புக்களும் அதிகம் உள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## திருப்பி அழைக்கப்படும் ரோஹித போகெல்லாகம

கொழும்பு, நவ.5

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் ரோஹித போகெல்லாகம நாட்டுக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பணிபுரிந்த ஒருவர் செய்த முறைப்பாட்டை அடுத்தே தூதுவரை நாட்டுக்கு மீள அழைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை அனுமதிக்கமாட்டோம். எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## வெளிநாட்டவர் இருவர் கைது!

நுழைவிசைவு இன்றி நாட்டில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இரு வெளிநாட்டுப் பிரஜைகள் நேற்றுமுன்தினம் கண்டி சுற்றுலாப் பொலிஸ் பிரிவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் இத்தாலி, பிரிட்டன் நாடுகளைசேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## பெரிய வெங்காய விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ.5

நாட்டின் பல பகுதிகளில் பெரிய வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 340 ரூபாவரையில் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகின்றது. பெரிய வெங்காயத்துக்கான விசேட பண்ட வரி அண்மையில் 20 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டது. இந்தநிலையில் கேள்விக்கு ஏற்ற வகையில் பெரிய வெங்காயத்தின் கையிருப்பு சந்தையில் இல்லாததால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)




## லிட்ரோ எரிவாயு விலைகள் மாறாது

கொழும்பு, நவ.5

லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை நவம்பர் மாதத்தில் மாற்றப்படாது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. லிட்ரோ எரிவாயு நிறுவனம் மாதாந்தம் விலைத்திருத்தம் செய்துவரும் நிலையில், நவம்பர் மாதம் எரிவாயு சிலிண்டர் விலையில் திருத்தம் செய்யப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை**

06.11.2024

புதன்கிழமை - ஐப்பசி - 20

சுபநேரம் : 04.35 - 06.05

ராகுகாலம் : 12.05 - 01.35

**நாளொரு நல்வார்த்தை**

ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்.

- அலெக்சாண்டர் சிமித்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்...

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, பிரதமர் ஹரிணி வடக்குக்கு நேற்றுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தீவிர பரப்புரையில் ஈடுபட்டார். கிளிநொச்சியில் இடம்பெற்ற பரப்புரையில் உரையாற்றும்போதே, போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர், மக்கள் மயப்படுத்தப்பட்ட திட்டங்களை விரைவாக முன்னெடுத்து வருகின்றோம். ஜனாதிபதி மாளிகையின் சுற்றுவட்ட வீதி திறக்கப்பட்டு மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் பலாலியில் உள்ள வீதியொன்று திறக்கப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்புப் பகுதிகளில் உள்ள பல்வேறு இடங்களை மக்களிடம் கையளிக்க தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

தேசிய மக்கள் சக்தியில் தாம் இணையப்போவதாகவும், எனவே தமக்கு வாக்களிக்கும் படியும் சிலர் மக்களிடம் கோரி வருகின்றமை தெரியவந்துள்ளது. அவ்வாறு எவரையும் நாம் எம்முடன் இணைக்கப் போவதில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் 25 அமைச்சர்கள் மட்டுமே பதவி வகிப்பார்கள். அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாகவே இருப்பார்கள். வேறு எவரும் கட்சியில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள். எனவே இவ்வாறான பொய்யர்களின் கருத்துகளை நம்ப வேண்டாம் என மக்களிடம் கோருகின்றேன்.

வடமாகாணத்திலோ அல்லது இலங்கையின் வேறு பகுதிகளிலோ போதைப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. வெளிநாடுகளில் இருந்தே அவை இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன. இந்தக் கடத்தல்களை முறியடிக்க நாம் கடும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் - என்றார். (அ-ம-27)

## ஊழல்...

பனை அபிவிருத்திச்சபையின் தலைமைத்துவம் திரும்பப் பெறப்பட்டமைக்கு, சபைக்குள் உள்ள ஊழல்களும் மோசடிகளுமே காரணம். நான் பொறுப்பேற்றால்

தமது ஊழல் மோசடிகள் வெளியில் வந்துவிடும் என்று அஞ்சியவர்களே என்னைப்பற்றிய தவறான தகவல்களை உயர் பீடங்களுக்கு வழங்கி நியமனத்தை இரத்துச் செய்தனர் என்று இரேனியஸ் செல்வின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை அபிவிருத்திச்சபையின் தலைமைப் பதவி நான் தேடிச் சென்றதொன்று அல்ல. அவர்களாகவே தந்தார்கள், பின்னர் அவர்களாகவே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். பனை அபிவிருத்திச்சபையுடன் நான் நீண்டகாலத் தொடர்புடையவன். எனவே, நான் பதவிக்கு வந்தால், சபைக்குள் நிலவும் ஊழல்களையும் மோசடிகளையும் இலகுவாக அம்பலப்படுத்துவேன் என்று நன்கு தெரிந்தவர்கள் தான் என்னைப்பற்றிய போலியான முறைப்பாடுகளை வழங்கி இந்த நியமனத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இன்று என்னை மீண்டும் பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுகின்றனர். கதிரைகளுக்கும் பதவிகளுக்கும் நான் ஒருபோதும் ஆசைப்பட்டதில்லை. ஆதலால், மீண்டும் ஒருதடவை அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளேன். ஆனால், இளையவர் ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்தால், அவரை வழிப்படுத்தி சபையை மேம்படுத்தித் தருவதாக நான் அவர்களிடம் தெரிவித்துள்ளேன்- என்றார். (அ-ம)


## இராணுவ...

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவ முகாம்களை அகற்றுவதாயின் அதற்கென வழிமுறையொன்று காணப்படுகின்றது. முதலில் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பான மதிப்பீடொன்று மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னரே இறுதித் தீர்மானத்தை எடுக்கமுடியும். உரிய வழிமுறைகளைப் பின்பற்றி அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியபின்னரே இது தொடர்பான தீர்மானத்தை எடுக்க முடியும். அண்மையில் அச்சுவேலி தோலகட்டிசந்தி வரையான வீதி பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீட்டின் பின்னரே திறக்கப்பட்டது. பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் மிகுந்த கரிசனையுடன் முப்படைகளும், பொலிஸாரும் செயற்பட்டு வருகின்றனர்- என்றார். (அ-எ-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 03 . 1958



மறைவு 03 . 11 . 2024

## இராசதுரை சந்திரசேகரன்

(சந்திரன் வெல்டிங் உரிமையாளர் - வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட இராசதுரை சந்திரசேகரன் நேற்று முன்தினம் (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - திரவியம் தம்பதியரின் அன்பு மகனும், ஜனனி, கஜானன், கஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விதுசனின் (அவுஸ்ரேலியா) அன்பு மாமனாரும், விஜயபாஸ்கரன், ஜெகமலர், காலஞ்சென்ற ஞானகுலேந்திரன் மற்றும் ஜெயரஞ்சனி, ஜெயகுமாரி, வசந்தகுமாரி, தயானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:
கஜானன் - 077 660 4341
கஜீவன் - 077 660 3161

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.29206) N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 03 . 1953



மறைவு 03 . 11 . 2024

## திரு. சிதம்பரப்பிள்ளை நிற்சிங்கராசா

மந்துவில் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நிற்சிங்கராசா 03.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-தெய்வானை தம்பதியரின் மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும், நந்தகுமாரி (ஆசிரியர்-யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), முகுந்தன், சயந்தன் (இலண்டன்), சத்தியா (ஆசிரியர்-யா/ மிருசுவில் றோ.க.த. பாடசாலை), கீர்த்தனா (ஆசிரியர்-மன்/ பற்றிமா ம.ம.வி), தர்ஷன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற றதீஸ் (RDA -கிளிநொச்சி), கவிதா, காயத்திரி (இலண்டன்), பிரகாஷ் (ஆசிரியர்-யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பிரதீபன் (ஆசிரியர்-யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), இந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுவர்ணிஜா, அபினாஸ், அக்சிகன், அக்ஸ்மிகா, ஆருசி, அனிஷ், சேயோனா, கேசிதன், பிரதிக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் விநாயகமூர்த்தி, திருமலர், சிவயோகம், இராஜகுலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), யோகமலர் (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கெங்கேஸ்வரி, தனபாலசிங்கம், நிரஞ்சுளா, பாஸ்கரன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கேலக்குள வீதி,
மந்துவில் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 43607) P-1

# கண்ணீர்க் காணிக்கை

பிறப்பு 11 . 05 . 1952



இறப்பு 27 . 10 . 2024

## சிவலிங்கம் யோகராணி

கடந்த 27.10.2024 அன்று பின்லாந்தில் காலமாகிய மத்திய கல்லூரி வீதி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், புலம்பெயர்ந்து பின்லாந்தில் (Finland) வசித்தவருமான சிவலிங்கம் யோகராணி அவர்களின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் காணிக்கையைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிப்பதோடு அவர்களின் ஆறாத்துயரில் நாமும் பங்கெடுத்துக் கொண்டு அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புதுமடம்
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

துயர்பகிர்வோர்
மணிராசா குடும்பத்தினர்

(CS/29244) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் கந்தசஷ்டி விரத காலப் பகுதியை முன்னிட்டு, கடந்த சனிக்கிழமை சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில் ஆலயப் பிரதமகுரு நா.சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமானது. (ம-66)



## இஸ்ரேலுக்கு அதிகபட்சத் தண்டனைகள் ஈரானியத் தலைவர் அயதுல்லா உத்தரவு

தெஹ்ரோன், நவ. 5

இஸ்ரேலுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்குமாறு, ஈரானிய உயர் தலைவரான அயதுல்லா ஈரான் இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஈரான் மீது இஸ்ரேல் கடந்த வாரம் நடத்திய வான் தாக்குதல்களில் ஈரானின் 20க்கும் மேற்பட்ட இராணுவ நிலைகள் அழிக்கப்பட்டன. அத்துடன் ஈரானிய இராணுவத்தினர் சிலரும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்காக இஸ்ரேலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் இராணுவம் தற்போது தயாராகி வருகின்றது.

ஈரான் இராணுவத்தின் விசேட இராணுவ நடவடிக்கைகளுக்கு அந்த நாட்டின் உயர் தலைவரான அயதுல்லா அனுமதி வழங்க வேண்டும் என்பது கட்டாயமாகும். அவருடைய அனுமதிக்காக ஈரான் படைகள் இதுவரை காத்திருந்த நிலையில், 'இஸ்ரேலுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்குங்கள்' என்று தெரிவித்து, அயதுல்லா தனது அனுமதியை வழங்கியுள்ளார். ஈரானிடம் உச்சக்கட்ட ட்ரோன் தொழில்நுட்பங்கள் உள்ளன. ஆதலால், ஆளில்லா ட்ரோன்களைப் பயன்படுத்தி இஸ்ரேல் மீது வான்தாக்குதல்களை ஈரான் விரைவில் முன்னெடுக்கும் என்று கருதப்படுகின்றது.

அயதுல்லாவின் தாக்குதல் உத்தரவுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. 'எங்கள் எச்சரிக்கையை மீறி ஈரான் இராணுவம் தாக்குதல் நடத்தினால் இஸ்ரேலுக்கு ஆதரவு கொடுப்போம். மத்திய கிழக்கில் பதற்றத்தை அதிகரிக்க வேண்டாம் என ஈரானுக்கு மீண்டும் மீண்டும் எச்சரிக்கை விடுக்கிறோம்' என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளரான மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார். (ம)





# உக்ரைனில் நேற்று ரஷ்யா தாண்டவம்!

## 140 இடங்களில் மூர்க்கத் தாக்குதல்

மொஸ்கோ, நவ. 5

**உக்ரைனின் 140க்கும் மேற்பட்ட பிராந்தியங்களில் ரஷ்யா நேற்றுத் தீவிரமான வான் தாக்குதல்களையும், ஏவுகணைத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளது.**

இரண்டரை வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்றுவரும் இந்தப் போரில், கடந்த ஒரு மாதகாலமாக ரஷ்யா உக்ரேன் மீது பெரியளவிலான தாக்குதல்கள் எதையும் நடத்தவில்லை. இவ்வாறிருக்கையில், நேற்றுக் காலைமுதல் உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், 140க்கும் மேற்பட்ட இடங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீண்டகாலப் போரில் உக்ரைன் ரஷ்யாவை எதிர்த்துப் போராடுகின்றது என்றால், அதற்கு அமெரிக்கா வழங்கிய இராணுவ உதவிகள்தான் மிகப்பெரிய காரணம். நாளை அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் நேற்று உக்ரைன் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை ரஷ்யா மேற்கொண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தாக்குதல்களை உக்ரைன் ஏற்றுக் கொண்டுள்ளதுடன், இந்தத் தாக்குதல்களுக்கு வினைத்திறனான முறையில் பதில் தாக்குதல் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளது. (ம)



## வெடித்துச் சிதறியது லாகி எரிமலை!

### 9 பேர் பரிதாபச்சாவு

யகார்த்தா, நவ. 5

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள லாகி எரிமலை வெடித்துச் சிதறியதில் 9 பேர் உயிரிழந்தனர்.

எரிமலை வெடிப்பால் அருகிலுள்ள கிராமங்களில் பல கிலோமீற்றருக்கு சாம்பல் நிரம்பியுள்ளது. 4 கிலோமீற்றர் தூரம் வரை பாறைகள் வெடித்துச் சிதறியதால் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்து முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். (ம)

## காசா போரை நிறுத்த கமலா அர்ப்பணிப்பாம்

வொஷிங்டன், ஒக். 5

காசாவில் இடம்பெற்றுவரும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு முடியுமான அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக கமலா ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலை முன்னிட்டு நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிக்கட்டப் பரப்புரையிலேயே, காசாவில் நிகழும் தாக்குதல்கள் மற்றும் துன்பியல்கள் தொடர்பில் கமலா ஹரிஸ் கருத்துப் பகிர்ந்துள்ளார். லெபனான் இஸ்ரேல் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டுவரவும் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளத் தயார் என்று கமலா ஹரிஸ் கூறியுள்ளார்.

இந்த வருடம் மிகவும் கடுமையானது. காசாவில் உயிரிழந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை கவலையளிக்கிறது. அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர், காசாவில் அமைதியை ஏற்படுத்தக்கூடிய நகர்வுகளை மேற்கொள்வது பிரதான பொறுப்புக்களில் ஒன்று. அதேவேளை, இஸ்ரேலின் பாதுகாப்பையும், பலஸ்தீன மக்களின் சுதந்திரத்தையும் உறுதி செய்வேன் என்று கமலா ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் சாமானிய மக்களுக்கான மருத்துவ செலவீனங்களை குறைத்து அனைவராலும் எளிதில் பெறக்கூடிய குறைந்த செலவின ஹெல்த்கேர் சேவைகள் வழங்கப்படும். மூத்த குடிமக்களுக்கான பராமரிப்பு சேவைகளின் செலவினமும் குறிக்கப்படும். உழைக்கும் மக்கள், நடுத்தர வர்க்க குடும்பங்கள், சிறு குறு தொழில்கள் பாதிக்காத வண்ணம் வரி விதிப்பு குறைக்கப்படும். அத்துடன், குழந்தைப் பேறு, கருக்கலைப்பு சுதந்திரம் உறுதி செய்யப்படும் என்றும் கமலா ஹரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## காலனித்துவ பங்களாக்கள் பொதுநிர்வாக அமைச்சிடம்

கொழும்பு, நவ.5

காலனித்துவ ஆட்சியில் கட்டப்பட்ட 31 பங்களாக்கள் கடந்தகாலங்களில் ஆட்சி செய்த ஆட்சியாளர்களால் அரச பங்களாக்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவற்றில் 28 பங்களாக்கள் அமைச்சர்களின் வாசஸ்தலங்களாக பாவிக்கப்பட்டுள்ளன. இந்த 28 பங்களாக்களும் தற்போது பொது நிர்வாக அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாக அமைச்சு இந்த பங்களாக்களுக் குரிய மின்கட்டணம், நீர்கட்டணம் போன்ற கட்டணங்கள் யாவும் கடந்தகாலங்களில் செலுத்தப்பட்டுள்ளனவா என ஆராய்ந்து வருகிறது. கட்டணங்கள் நிலுவையாக இருந்தால் அவற்றை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகளையும் பொது நிர்வாக அமைச்சு மேற்கொண்டு வருகிறது. இந்த பங்களாக்களை பொருளாதார ரீதியாகவும் பொதுமக்களுக்கு பயன்படும் வகையிலும் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பது தொடர்பாகவும் பொது நிர்வாக அமைச்சு ஆராய்ந்து வருகிறது. (ஏ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

யாழ்., நவ. 5
சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் சரசாலை பொதுநூலக தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா, இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மட்டுவில் கமலராணி வித்தியாலய மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேசபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-131)


**ADDENDUM OF INVITATION FOR BIDS (IFB)**
**DISTRICT SECRETARIAT - MULLAITIVU.**
**Balance Work for Construction of Healing Center at Oddusuddan, Mullaitivu.**
**MU/KAC/PRO/WO-2024/29**

As per the above invitation of Bid Published on 01.11.2024, Clause 9 is amended as follows.

| Bid ID | Description of work | Estimated amount (Rs.)(without VAT) Million | Contract Period (Days) | Grade Request | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Security Amount | Validity Period |
| MU/KAC/PRO/WO-2024/29 | Balance Work for Construction of Healing Center at Oddusuddan, Mullaitivu. | 19.8 | 210 | C6 & C5 (Buildings) | 200,000.00 | Till 19.03.2025 |

All of the other clause will remine and unchanged if any inconvenience costs must regrate.

Chairman,
Departmental Procurement Committee,
District Secretariat,
Mullaitivu.
(CR/43603) J-1 05.11.2024

## மாந்தை கிழக்கு பிரதேசசபை
## 2025 ஆம் ஆண்டிற்கான குத்தகை கேள்வி அறிவித்தல்

மாந்தை கிழக்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொன்னகர், பாண்டியன்குளம், பாலிநகர், நட்டாங்கண்டல், கொல்லவிளாங்குளம் சந்தைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்** :- 05.11.2024 –18.11.2024 **(அலுவலக நாட்களில் மு.ப 9.00 -பி.ப 3.00 மணிவரை)**
**கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி** :- 18.11.2024 மு.ப 11.00 மணிவரை
**கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி** :- 18.11.2024 மு.ப 12.00 மணி வரை
**கேள்வி திறக்கப்படும் திகதி** :- 18.11.2024 மு.ப.12.00 மணி
**கேள்வி திறக்கும் இடம்** :- **மாந்தை கிழக்கு பிரதேசசபை அலுவலகம்**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர, மாந்தை கிழக்கு பிரதேசசபை , பாண்டியன்குளம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைகக்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துகக் முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **" பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு "** என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைகக்ப்பட வேண்டும்.

**இறைச்சிக்கடை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | கோழி இறைச்சிக்கடை | பாண்டியன்குளம் | 4,400.00 | 1,500.00 | 1,000.00 |
| 2 | கோழி இறைச்சிக்கடை | நட்டாங்கண்டல் | 13,200.00 | 1,500.00 | 1,000.00 |
| 3 | கோழி இறைச்சிக்கடை | பொன்னகர் | 4,800.00 | 1,500.00 | 1,000.00 |
| 4 | கோழி இறைச்சிக்கடை | பாலிநகர் | 13,200.00 | 1,500.00 | 1,000.00 |
| 5 | கோழி இறைச்சிக்கடை | கொல்லவிளாங்குளம் | 134,200.00 | 1,500.00 | 1,000.00 |
| 6. | மரக்கறிச்சந்தை | பாண்டியன்குளம் | 5,500.00 | 1,500.00 | 1,000.00 |
| 7 | மரக்கறிச்சந்தை | நட்டாங்கண்டல் | 5,500.00 | 1,500.00 | 1,000.00 |
| 8 | மரக்கறிச்சந்தை | பொன்னகர் | 4,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 9 | மரக்கறிச்சந்தை | பாலிநகர் | 20,500.00 | 1,500.00 | 1,000.00 |
| 10 | வாராந்தச்சந்தை | கொல்லவிளாங்குளம் | 5,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 11 | மீன் சந்தை | பாண்டியன்குளம் | 4,800.00 | 1,500.00 | 1,000.00 |
| 12 | மீன் சந்தை | நட்டாங்கண்டல் | 4,800.00 | 1,500.00 | 1,000.00 |
| 13 | மீன் சந்தை | பொன்னகர் | 4,000.00 | 1,500.00 | 1,000.00 |
| 14 | மீன் சந்தை | பாலிநகர் | 6,000.00 | 1,500.00 | 1,000.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்ககக்கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
5. வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
6. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
7. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். செயலாளர் பிரதேசசபை, மாந்தை கிழக்கு

**செயலாளர்,**
**பிரதேசசபை,**
**மாந்தை கிழக்கு.**
(cr.43573) (N-1)

## கண்ணீர் அஞ்சலி




**சிற்றம்பலம் வாமதேவன்**
(Former Proof Reader Dept. of Govt Printing)
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 07.03.1939 மறைவு 01.11.2024
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
பிரிவில் பங்குகொள்ளும்
ஆலய பரிபாலன சபையினர்
விளைவேலி மருதடி வீரசக்தி விநாயகர் தேவஸ்தானம்.
(CR/43605) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 11 . 1957



மறைவு 03 . 11 . 2024

**சிவசம்பு சண்முகநாதன்**

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சண்முகநாதன் நேற்றுமுன்தினம் (03.11.2024) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விஸ்வநாதர் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலராணி அவர்களின் பாசமிகு கணவரும், சிவலோகநாயகி, வரதராணி ஆகியோரின் சகோதரனும், ஹம்சலா (லண்டன்), அஜிபன் (கிழக்குப் பல்கலைக்கழக மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிபாலன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், ஆதீரா அவர்களின் பாசமிகு தாத்தாவும், செல்வராணி, நாகராணி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், V.S. குலசிங்கம் (இளைப்பாறிய நிறைவேற்று அதிகாரி - இலங்கை வங்கி), வித்தியானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும், பங்கயவல்லி, தங்கராணி, சிவகுமார், வரதராஜன், கருணையந்தன், யாழினி ஆகியோரின் சகோதரனும், மலர்விழி (ஜேர்மனி) ரஜிவி (லண்டன்), தாக்ஷாயினி (லண்டன்), லாவன்யா (ஜேர்மனி), பிரதீபா (அவுஸ்ரேலியா), திலிப்குமார் (ஜேர்மனி), ஷகானா (ஜேர்மனி), கோகுலன் (ஜேர்மனி) ஆகியோரின் சிறியதந்தையும், வைத்திஸ்வரன், உதயகுமார் (உபஅதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 579 4883**
(cs.29245) N-1)

## மணமகள் தேவை

1. சுண்டிக்குழி, இந்து, கௌரவகுலம் (V) 1987, திருவோணம், BA (Hons) Business Management CIMA UK Citizen Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. போன் - 077 539 3728
2. குப்பிளான் - கொக்குவில் இந்து கௌரவகுலம் (V), 1990, கேட்டை, Ph.D, Director, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
3. நெல்லியடி, இந்து கௌரவகுலம் (V) 1991, பூராடம், HND (Jaffna University) USA, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
4. வேலணை, இந்து, கௌரவகுலம் (V) 1989, கேட்டை, Civil Engineer (Moratuwa University), Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
5. காரைநகர் - கோப்பாய், இந்து கௌரவகுலம் (V), 1992, பூரம் BSc Engineering,Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
6. நீர்வேலி, இந்து, கௌரவகுலம்.1989, சுவாதி, Ph.D, South Korea மணமகனுக்கு மணமகள் தேவை.
7. யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், 1986, மகம், BSc, MSc UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
8. புலோலி, இந்து, கௌரவகுலம் 982 சுவாதி, BSc in Engineering (UK) Australia Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
9. கரவெட்டி, புங்குடுதீவு இந்து கௌரவகுலம்,1989 மிருகசீரிடம், BSc , UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P.
www.thaalee.com
திருமண சேவை
077 539 3728
whatsap: 077 803 8193
(cs.29239)(N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி 2024 ( கட்டம் V)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.

3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)

5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர். வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327 ) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.11.05 – 2024.11.18 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைக்கேள்விகள் (மூலம்.பிரதி) 2024.11.19ந் திகதி 10.30 மணிக்கு முன்னர் **தலைவர். உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு. வலி தெற்கு பிரதேச சபை. சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2024.11.11 அன்று நடைபெறும்

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரு.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15) /02/05/CF-S / 2024/49 | **தொகுதி A**<br>1. சோமரந் தோட்ட முதலாம் குறுக்கு வீதி புனரமைத்தல், சுன்னாகம் (கட்டம் IV)<br>2. மயிலணி வடக்கு முன்றாம் ஒழுங்கை அமைத்தல்<br>3. நொதேர்ன் விளையாட்டுக்கழக கிழக்கு ஒழுங்கை அமைத்தல், உடுவில் | 2.82 | 45 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 29,000.00 | 18.02.2025 வரை |
| 02. | NP/14/41(15) /02/05/CF-S/ 2024/50 | **தொகுதி B**<br>1. சுன்னாகம் மின்சார நிலைய வீதி முன்றாம் ஒழுங்கை அமைத்தல்<br>2. ஸ்கந்தவரோதய கல்லூரி கிழக்கு ஒழுங்கை புனரமைத்தல் | 2.33 | 45 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 24,000.00 | 18.02.2025 வரை |
| 03. | NP/14/41(15) /02/05/CF/ 2024/51 | **தொகுதி C**<br>1. அருளகம் வீதி முதலாம் ஒழுங்கை அமைத்தல்<br>2. பூதவராயர் முன்றாம் குறுக்கு வீதி அமைத்தல் | 2.07 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 21,000.00 | 18.02.2025 வரை |
| 04. | NP/14/41(15) /02/05/CF/ 2024/52 | சுன்னாகம் மின்சார நிலைய வீதி - கொத்தியாலடி இணைப்பு வீதி அமைத்தல் | 5.42 | 60 | C7 and C6 (வீதிகள்) | 77 | 04.02.2025 | 55,000.00 | 04.03.2025 வரை |
| 05. | NP/14/41(15) /02/05/CF/ 2024/53 | சுன்னாகம் மின்சார நிலைய தெற்கு வீதி அமைத்தல் | 3.64 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 37,000.00 | 18.02.2025 வரை |
| 06. | NP/14/41(15) /02/05/CF/ 2024/54 | அறிவொளி சனசமூகநிலைய குறுக்கு வீதி உப ஒழுங்கை அமைத்தல், ஏழாலை | 2.54 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 26,000.00 | 18.02.2025 வரை |
| 07. | NP/14/41(15) /02/05/CF/ 2024/55 | சூராவத்தை வெள்ளவாய்க்கால் வீதி புனரமைத்தல், ஏழாலை | 2.33 | 60 | C8 and C7 (வீதிகள்) | 63 | 21.01.2025 | 24,000.00 | 18.02.2025 வரை |
| 08. | NP/14/41(15) /02/05/CF/ 2024/56 | வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் பொது நூலக கட்டட அபிவிருத்தி வேலைகள் | 2.71 | 60 | C8 and C7 (கட்டடம்) | 63 | 21.01.2025 | 28,000.00 | 18.02.2025 வரை |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50 மில்லியனினுள் இருப்பின். பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) பின்பற்றப்படும்".

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

05.11.2024

(ஏ.43606) (N-1)

# மாமியார் மீது துப்பாக்கிச் சூடு
## மருமகன் தலைமறைவு

வவுனியா, நவ. 5

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் பெண்ணொருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருடைய மருமகனே துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். நாட்டுத் துப்பாக்கியால் பெண்ணின் வாய்ப்பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

# வீடொன்றின் மீது குழு தாக்குதல்
## ஆனைக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில், மோட்டார்சைக்கிளில் வந்த நால்வரைக் கொண்ட குழுவே வீட்டின் மீது தாக்குதல் நடத்தி, உடைமைகளை அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பியோடியுள்ளது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-27)

# பாதுகாப்பு உத்தியோகத்தர் விவரம் ஒரு வாரத்துக்குள்

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முக்கியமான பிரமுகர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பற்றிய விவரம் ஒரு வாரத்துக்குள் வெளியிடப்படுமென பொலிஸ் ஊடக ப் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முக்கியமான பிரமுகர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைப்பது பற்றிய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறும், அவர்களது தனிப்பட்ட பாதுகாப்பை கருத்தில்கொள்ளுமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. எனவே இது பற்றிய இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை எனவும் இறுதித் தீர்மானம் ஒருவாரத்தினுள் வெளியிடப்படும். புலனாய்வு அதிகாரிகள் மற்றும் முக்கியமான பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர்பாக புலனாய்வுப் பிரிவின் அறிவுறுத்தலுக்கமையவே தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25-6)

வாடகைக்கு
யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 366 1681

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் சங்கானை O/L, A/L
வகுப்புகள் சிறு குழுக்களாக, தமிழ் - கரன்,
மீடியா - பிரசாத், வரலாறு - லக்ஷன்,
ஆங்கிலம் - விக்னேஸ், குபேரன் கட்டடமாடி, சங்கானை ரவுண்.
Tel. 077 675 1649

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 12 • 02 • 1961

மறைவு 06 • 10 • 2024

அமரர்

## அருளானந்தம் வயலட் கொன்சி

வார்த்தைகளால் முடியாது - ஆதலால்
கண்ணீர்த்துளிகளால் பேசிக்கொள்கிறோம்!
விதியின் அகண்ட வேகத்தில்
மனிதனின் அறிவு மயங்குதல்போல்
இறை அனுக்கிரகங்களும்
மறுக்கப்பட்டுத்தான் போகின்றனவோ?

"கொன்சி" -என் அன்பிணையே!
ஆல்விழுதுகள் என ஆயிரம் உறவுகள் இருந்தாலும்....
என் உறுதியின் ஆணிவேர் நீதானே!
இனி நான் என்னாவேன்?

அன்பான அன்னையே!
வளமான வாழ்விற்காய்
கண்டங்கள் தாண்டி நாம் வாழ்ந்தாலும்
ஜதார்த்தங்களின் புரிதல்களை
எமக்குப் புகட்டி நம்மூவரின்
முன்னேற்றங்களில் அகமகிழ்ந்த நேசமான நித்திலமே!
எம் மகிழ்ச்சிகள் விசும்பல்களாகி
வெந்து கொண்டிருக்கின்றன!
கூறாமல் நீங்கள் காததூரம் சென்றதேனோ??

நேசமான உடன்பிறப்பே !
எம் உணர்வுகளைப் புரிந்துகொண்ட
உயிரோட்டமான அகராதி நீதானே!
இன்று ......உன் இழப்புக்களால்
நிலை தடுமாறிப்போனது நாம் மட்டுமல்ல
நம் உணர்வுகளும்தான்!!

பாசமான மாமியாரே !
அன்பின் மறுவுருவாகவும்,
அன்னையின் பிரதிபலிப்பாகவும் திகழ்ந்து
எம் உள்ளக் கலசங்களைத் - தங்கள்
கொள்ளைப் பிரியத்தால் நிரப்பியிருந்தீர்கள்!
இதுவரை இரட்டைத்தாயன்பை நுகர்ந்தவர்கள் இன்று.....
பாசத்தைத் தொலைத்த பாவிகளாய் நாம்!

கடவுளாகிவிட்ட நீவிர் புனித திரேசாளுடன்
வானிலிருந்து எம்மைக் காத்திடுவீர்
என்ற நம்பிக்கையுடன் ...

இல, 90, இராசாவின்தோட்டம்.
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும்
உடன்பிறப்புகள்.

(cs.)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 • 08 • 1942

மறைவு 03 • 11 • 2024

## கனகசபை திருச்செல்வம்

நயினாதீவை பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வதிவிடமாகவும் தற்போது சம்பியன் லேன் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை திருச்செல்வம் (ஓய்வு பெற்ற அதிபர் ) நேற்று முன்தினம் (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (சிற்பக் கலைஞர்) - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் (சிங்கத்தார்) - இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதி அவர்களின் பாசமிகு கணவரும், பொற்செல்வி (ஆசிரியர் - நு/நல்லிளைப்பாற்றி ம. பாடசாலை.) பொற்பாவை (பொது முகாமையாளர், புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுசங்கம்), பொற்கொடி (ஆசிரியர்), விஜிதா (ஆசிரியர்), ஆராதனா (ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான ரவிச்சந்திரன், பிரபாகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநிதி A.V இராஜேந்திரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி), பாலசிங்கம் (வர்த்தகர் - புங்குடுதீவு), காலஞ்சென்ற சிமியோன் பாஸ்கர் (தாதி உத்தியோகத்தர் - நொதேர்ன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்ஜினா (கட்டட ஒப்பந்தகாரர்), நிரோஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் நல்லூர்), பாசுதா (லண்டன்), அஷ்வினா (லண்டன்) பிலிப்றோய் (marketing) பவுஸ்தீனா (மனித உரிமை செயற்பாட்டாளர்), திஸ்ஷாளினி (ஆய்வுகூட உத்தியோகத்தர் நவலோக வைத்தியசாலை), லோஜன் (மாணவன் பல்கலைக்கழகம்), டிஸ்ஷாளினி (மாணவி) ஆகியோரின் அன்பு பேரனும், ஆகிசன், சகீசன், வெண்பா, கிருஷிகன், கருணி ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, திலகவதி, சபாரெத்தினம் (சிந்தனைச் சிற்பி), தில்லையம்பலம் (தபால் ஊழியர்), மருதப்பு (ஆசிரியர்) பரமேஸ்வரி, திருஞானம் (இலங்கை போக்குவரத்துச் சபை - பரிசோதகர்), ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், செல்லையா, இராசம்மா, நாகரத்தினம், அன்னலட்சுமி, மயில்வாகனம் இராஜேஸ்வரி, சிறிகரன் மற்றும் பசுபதிநேசன், காலஞ்சென்றவர்களான சோமாவதி (கனடா), நவரெத்தினம் மற்றும் சிவராசமதி (கொழும்பு), பத்மநாதன், தில்லைநாயகி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

56/7, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(CS/29243) J-1

தகவல் :
குடும்பத்தினர்

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 • 12 • 1942

மறைவு 03 • 11 • 2016

## அமரர் கந்தையா பரமநாதன்

திதி : சதுர்த்தி


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
எட்டாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

4/3, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

(CS/29235) J-1

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜனநாயக த.தே.கூட்டணி வடமராட்சியில் பரப்புரை

யாழ்ப்பாணம், நவ.5

பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வடமராட்சியில் நேற்று திங்கட்கிழமை பரப்புரை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வடமராட்சி பிரதேசத்துக்குட்பட்ட நெல்லியடி, பருத்தித்துறை நகரங்களில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களிடம் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து சங்கு சின்னத்துக்கு ஆதரவு கோரும் பரப்புரை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-100)

# கூட்டமைப்பை அழித்ததை தவிர வேறு எதையுமே செய்யவில்லை

### கடுமையாகச் சாடும் மணிவண்ணன்



**யாழ்ப்பாணம், நவ. 5**

**தமிழ்த் தேசியம் என்று பேசுபவர்கள் விடுதலைப் புலிகளின் முழுமையான ஆதரவுடன் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழித்ததை தவிர வேறு எந்த உரிமைகளையும் வென்றெடுக்கவில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.**

சுழிபுரம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்களுடைய வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்துக்கு சென்றவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை நாங்கள் முன்னெடுக்கப் போகின்றோம், எங்களுடைய மாவீரர்களின் கனவுகளை சுமந்து செல்ல போகின்றோம், விடுதலையை வென்றெடுக்க போகின்றோம் எனச் சென்றார்கள். ஆனால் தமிழ்த் தேசியம் எனக் கூறி எதையுமே சாதிக்காமல் மீண்டும் ஒரு தடவை எங்களுக்கு ஆணை தாருங்கள் என உங்கள் முன் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்னும் ஐந்து வருடங்கள் ஆணை கொடுத்தால் தமது கட்சிப் பிரச்சினையை நீதிமன்றத்தில் வழக்காடி தீர்த்துக் கொள்ள முயல்வார்களே தவிர, தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்யப் போவதில்லை - என்றார். (எ-45-27)

நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சுதந்திரத் தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பின் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் ஹெரிவிபோவோ ரிக்சாக்சொனா நேற்று யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபனை மாவட்டச் செயலர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். (எ-66)





## ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு வடமராட்சியில் தேர்தல் பரப்புரை

யாழ்ப்பாணம், நவ.5

மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக வடமராட்சியில் நேற்று திங்கட்கிழமை பரப்புரை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நெல்லியடி, பருத்தித்துறை நகரங்களில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து மாம்பழச் சின்னத்துக்கு ஆதரவு கோரும் பரப்புரை நடவடிக்கை ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு ஆதரவாளர்களால் காலை முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (எ-100)





காங்கேசன்துறை ஐயனார் ஆலய மண்டலாபிஷேக 12 ஆம் நாள் திருக்கல்யாணம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

## அவதூறு பரப்பியமைக்காக சுமந்திரன் மீது முறைப்பாடு

### சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு

மன்னார், நவ.5

உண்மைக்குப் புறம்பாக அவதூறு பரப்பிய எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மதுபானசாலைக்கு சிபாரிசுக் கடிதம் வழங்கினேன் என்றும், அதை நான் வெளிப்படையாக ஒப்புக் கொண்டேன் என்றும் உண்மைக்குப் புறம்பான கருத்தை எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சுமந்திரன் அவர்கள் கூறியிருந்தார். இந்தக் கருத்தை அவர் கூறிய சமயம் நான் இந்தியாவில் இருந்தமையால், மன்னார் வந்தவுடன் உண்மைக்குப் புறம்பான கருத்து வெளியிட்டமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன். இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கவே தேர்தலில் போட்டியிட வேண்டாம் எனத் தீர்மானித்திருந்தேன்.

சுமந்திரனுக்கு நான் பகிரங்க சவால் விடுக்கின்றேன். நான் வழங்கிய சிபாரிசுக் கடிதத்தை அவர் கொண்டு வந்தால் நான் அவர் சொல்வதை செய்கிறேன்-என்றார். (எ-213)

## சுவரொட்டி, சின்னம் அகற்றம்

யாழ்ப்பாணம், நவ.5

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும், பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களினால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கு வர்ணம் பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு காப்பெற் வீதிகளில் பொறிக்கப்பட்டுள்ள வேட்பாளர்களின் சின்னங்களும் வர்ணங்கள் பூசி அழிக்கப்பட்டு வருகின்றன. (எ-25-17)

சூரிச் சிவன்கோயில் சைவத்தமிழ் சங்க அன்பேசிவ இளம் தொண்டர் சபையின் நிதி அனுசரணையில் 'வரப்புயர மரநடுகை' திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு முகமாலை சிவபுர வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் அன்பே சிவ தாயக இணைப்பாளர், நிர்வாகத்தினர், தொண்டர்கள், பணியாளர்கள், கிராமமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். எதிர்வரும் நாள்களில் கிழக்கு, வடக்கு மாகாணங்களில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ-25-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேரளக் கஞ்சா பூநகரியில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.5

யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், பூநகரி பொலிஸாருடன் இணைந்து முன்னெடுத்த சோதனையில் பூநகரி கௌதாரி முனைப் பகுதியில் இருந்து 80 கிலோ கேரளக் கஞ்சாவும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(எ-25-20)

## வீதி விபத்துகள் இந்த ஆண்டு குறைவு

கொழும்பு, நவ.5

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் வீதி விபத்துகள் சற்று குறைந்துள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் வீதி விபத்துகளில் 2 ஆயிரத்து 557 பேர் இறந்துள்ளனர். இந்த வருடம் ஒக்ரோபர் 25ஆம் திகதிவரையான காலப்பகுதியில் வீதி விபத்துகளால் ஆயிரத்து 898 பேர் இறந்துள்ளனர் என்று பொலிஸ் திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வீதி விபத்துகளில் இறந்தவர்களில் பெரும்பாலானோர் பாதசாரிகள் எனவும் மோட்டார் சைக்கிள் மீது மோதியே அதிக விபத்துகள் நடந்துள்ளன என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(எ-6)

நவம்பர்...

பொதுத்தேர்தல் நடத்தப்படவுள்ள திகதியாக நவம்பர் மாதம் 14ஆம் திகதி அறிவிக்கப்பட்டமை தவறு என்றும், இந்தத் திகதி அறிவிக்கப்பட்டமையானது அரசமைப்புக்கு முரணானது என்று வலியுறுத்தியும் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு மீதான விசாரணைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போது, மனுதாரரினதும், பொலிஸ்மா அதிபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளினதும் சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இதையடுத்தே, நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறும் என்பது உறுதியாகியுள்ளது.

(அ-ம)

**காணி விற்பனைக்கு**

காரைநகர் மேற்கு சுற்று வீதியில் உள்ள வியாவில் ஐயனார் கோவில் பகுதியில் பிரதான மேற்கு வீதியில் இருந்து 50m தூரத்தில், நல்லதண்ணீர் கிணற்றுடன் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.
(CS/29232) J-1

**077 502 2330**

**விற்பனைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் யாழ். ஆஸ்பத்திரி வீதி முகப்புடன் இரட்ணம் பார்மசிக்கு அருகில் 46' அகலமும் 216' நீளமும் கொண்ட 5 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **077 723 2535**
(CS 29250) P-1

இன்னும் ஓரிரு நாட்களே உள்ளன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

**ஆரம்பகால திருமண சேவை**

கனடா, அவுஸ்ரேலியா, இலண்டன், ஜேர்மன், உள்ளூர் மற்றும் வெளியூர் மணமகன், மணமகள் உள்ளனர். அவுஸ்ரேலியா மெல்பேர்னைச் சேர்ந்த 58 வயது மணமகனுக்கு மணமகள் தேவை சீதனம் எதிர்பார்க்கவில்லை (V) மணமகள் தேவை
வேலை : Technician, அவுஸ்ரேலியா சிற்றிசன் மணமகன் ஸ்ரீலங்கா வந்துள்ளார்.

தொடர்பு:077 528 9851

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக் கூடிய வகையில்

**பரிபூரணம்**

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**விபரங்களுக்கு :-**
**ஈ - சன்ஸ்**
**அந்திய கால சேவை**
**148, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 2695, 076 584 6523**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 100 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே

- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம் -
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு: **ஜெயம்**

**077 8147 389**
**077 986 5457**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org